(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** **24 PTM 311**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2025

பி. ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

மூன்றாம் பருவம் நேரம் : 3 மணி

தொல்காப்பியம் பொருளதிகாரம்

**பகுதி – அ** **(10x1=10** மதிப்பெண்கள்)

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. ________________ மேய காடுறை உலகமும் .
   (அ) மாயோன் (ஆ) சேயோன் (இ) வருணன் (ஈ) வேந்தன்
2. வெட்சிதானே ____________________ புறனே.
   (அ) முல்லை (ஆ) குறிஞ்சி (இ) மருதம் (ஈ) பாலை
3. பெருமையும் ஆடூஉ மேன...............
   (அ) வலிமையும் (ஆ) அச்சமும் (இ) உரனும் (ஈ) மடனும்
4. ________________ யாத்தனார் கரணம் என்ப.
   (அ) ஐயர் (ஆ) முன்னோர் (இ) பெரியோர் (ஈ) சான்றோர்
5. நிரம்பிரி - பொருள் தருக.
   (அ) கோபம் (ஆ) களவு (இ) ஏழ்மை (ஈ) பொறாமை

கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. (K2)

6. "கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை" – நூற்பா இடம்பெற்ற நூலைக் குறிப்பிடுக.
7. கொற்றவை நிலைக்குப் புறனாக அமைந்த திணை எது?
8. தொல்காப்பியம் சுட்டும் திருமண வகைகள் எத்தனை?
9. 'மொழி எதிர் மொழிதல்' - யாருக்குரிய மரபு?
10. அறத்தொடு நிற்கும் முறைமையுடையவள் யார்?

பகுதி – ஆ ( **5 X 5 = 25** மதிப்பெணகள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. **(K3)**

11. (அ) முதற்பொருளின் நிலப்பகுதிகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) உரிப்பொருட்களை நூற்பாவுடன் கூறுக.

12. (அ) வெட்சித்திணையின் இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) வஞ்சித்திணையின் இலக்கணத்தை எழுதுக. (த.பி.பா.)

13. (அ) ஐயத்தைக் களையும் கருவிகளாக தொல்காப்பியம் சுட்டுவன எவை?

அல்லது)

(ஆ) தலைவி தன் வேட்கையைத் தலைவன்முன் வெளிப்படக் கூறுவதில்லை என்பதை விளக்குக.

14. (அ) கற்பின் இலக்கணத்தைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) கரணம் அனைவர்க்கும் உரியது என்பதை நூற்பாவழி உரைக்க.

15. (அ) தலைமகளின் மடன் தோன்றும் இடங்கள் எவை?

(அல்லது)

(ஆ) தோழி அறத்தொடு நிற்கும் தன்மையைக் கூறுக.

பகுதி – இ ( **5 X 8 = 40** மதிப்பெண்கள் )

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.

**(K4 (Or) K5)**

16. (அ) ஐந்திணைகளுக்குரிய சிறுபொழுது மற்றும் பெரும்பொழுதுகளை உரியவழியில் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பிரிவு வகைகளை விளக்கி வரைக.

17. (அ) உடன்போக்கின்கண் நிகழும் நற்றாய் கூற்றினை விவரி.

(அல்லது)

(ஆ) கண்டோர் கூற்று நிகழும் இடங்களை எடுத்து மொழிக.

18. (அ) தொல்காப்பியம் குறிப்பிடும் எண்வகை மணங்களை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) தலைவி மனவலிமையற்றுச் சொல்லும் மொழிகளை வரிசைப்படுத்துக.

19. (அ) கற்பின்கண் நிகழும் தோழிக்குரிய கூற்றுகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) வாயில்கள் கூற்று நிகழ்த்தும் இடங்களை விளக்குக.

20. (அ) உள்ளுறையின் வகை, பயன் மற்றும் உள்ளுறையாக வரும் கூற்றுகள் இவற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இறைச்சி குறித்துக் கட்டுரைக்க.



***********